https://tamileelamarchive.com/

கரும்புலிகள்

# "காந்தரூபன் அறிவுச் சோலைக்கு" வித்திட்ட கரும்புலி

- மேஜர் காந்தரூபன்



1987 இன் ஆரம்பம். அப்போது காந்தரூபன் தொண்டைமானாறு சிங்களப் படைமுகாமைச் சுற்றியிருந்த காவலரணில் கடமையில் இருந்தான். ஒரு நாள் முகாமிலிருந்து சிங்களப் படையினர் வெளியேறியபோது சண்டை தொடங்கியது. அச்சண்டையின் ஒரு சந்தர்ப்பத்தில், எதிரியில் கையில் உயிருடன் பிடிபட்டுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகியபொழுது, காந்தரூபன் குப்பியைக் கடித்துவிட்டான். ஆனால், அதிர்ஷ்டவசமாக சக தோழர்களால் மீட்கப்பட்டு காப்பாற்றப்பட்டான்.

இருந்தபோதும் - சயனைட் விசம் காந்தரூபனின் உடலில் ஒரு உட்பாதிப்பை உண்டாக்கியிருந்தது. இந்த உட்பாதிப்பிற்கான பராமரிப்பு முறைகளில் அத்தியாவசியமானதாக நிறை உணவு அருந்த வேண்டுமென, மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

1988ம், 1989ம் ஆண்டு காலம். இப்போது காந்தரூபன் தலைவர் அவர்களுக்குப் பக்கத்தில் மணலாற்றுக் காட்டில் நின்றான்.

காந்தரூபனிற்கு இப்போதும் நிறை உணவு தேவைப்பட்டது. ஒரு பசுமாடு இருந்தால் காந்தரூபனிற்கும் - சுகவீனம் அடைகின்ற போராளிகளுக்கும் பால் கொடுக்க முடியும் எனக் கருதிய தலைவர், வெளியிலிருந்து பால்தரக்கூடிய நல்ல இனப் பசு ஒன்றை, காட்டுக்குள் இருந்த தளத்திற்குக் கொண்டு வருமாறு சொன்னார். பசு வந்து சேர்ந்தது.

தலைவரின் துணைவியார், ஒரு தாயைப்போல இருந்து பால் காய்ச்சிக் கொடுத்தார்.

அந்தப் பொழுதுகளிலெல்லாம் காந்தரூபன் நெஞ்சு நெகிழ்ந்து நிற்பான். தான் ஒரு கதியற்றவன் என்ற கவலையே அற்றுப்போகும்.

ஒரு நாள் அன்பு கலந்த மரியாதையோடு, காந்தரூபன் தலைவருக்குப் பக்கத்தில் வந்தான். பாசத்தோடு அவனை அழைத்து அருகில் இருத்திக் கதைத்தார் தலைவர்.

"அண்ணை... என்னை கரும்புலிகளில் சேர்த்துக் கொள்ளுங்கோ.." என்றான். அதோடு தனது உள்ளத்துக்குள் உறைந்து கிடந்த இன்னொரு



https://tamileelamarchive.com/

விருப்பத்தையும் அவன் தலைவரிடம் சொன்னான். தயவு செய்து நீங்கள் அதைச் செய்ய வேணும் ...." அவனுக்கருகில் இருந்து அவன் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் தலைவர். "என்னைப் போல எத்தனையோ பொடியள் இந்த நாட்டில அநாதைகளாக வாழுறாங்கள் .. அப்பா, அம்மா இல்லாம, சொந்தக்காரரின் ஆதரவில்லாம அலைஞ்சு திரியிறாங்கள். வாழ இடமில்லாம, படிக்க வசதி இல்லாம, எவ்வளவோ ஏக்கங்களோடையும் துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் எண்டிறதை, நான் அனுபவத்தில கண்டனான் அண்ணை ....." "நீங்கள் என்னை அன்போட கவனிச்சுப் பார்த்ததைப் போல அவங்களையும் கவனிக்க வேணும். அவங்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதி செய்து கொடுங்கோ. அவர்களுக்கெண்டு ஒரு இடத்தை அமைச்சு, அங்கவச்சு அவங்களையெல்லாம் வளர்த்தெடுத்து - அவங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் குடுத்து விடுங்கோ அண்ணை ...." தலைவரின் இதயத்தை இது தொட்டது. அப்படியான ஒன்றின் தேவை பற்றி எண்ணியிருந்த தலைவருக்கு காந்தரூபனின் வேண்டுகோள் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவ்வாறான இல்ல மொன்றை ஆரம்பித்து - காந்தரூபனின் நினைவாக, அதனை "காந்தரூபன் அறிவுச்சோலை" என்ற பெயரிலேயே இன்று செயற்பட

## சுகமாய் போவன் பெரியம்மா... ஆனா.... திரும்பி வாறதென்கிறது தான்.... - கரும்புலி காந்தரூபன்

அவருடைய கண்கள் கலங்கிப்போயின. தனது சால்வையால் கண்களை ஒற்றிக் கொண் டார். அருகிலே நின்ற அம்மாசொன்னா-"அன்றைக்கு முழுவதும் இவர் ஒரு மாதிரியா இருந்தார். நான் ஒண்டும் கேக்கேல்லை. பின்னேரம், கடலில பொடியள் கரும்புலியாய்ப் போய் கப்பலடிக்கப் போறாங்களாம் எண்டு, பாத்திட்டு வாறனெண்டு போனார். காந்தரூபனும் போகப் போறான் எண்டு இவர் சொல்லவில்லை. இரவானதும் எனக்கு நித்திரை வரமாட்டனெண்டிட்டுது. சத்தத்தையாவது கேப்பமெண்டு வீட்டு வாசலில் இருந்தன். கொஞ்ச நேரத்தில் கடலதிரச் சத்தங்கேட்டது. நான் வாசலிலேயே இருந்தன். சாமம் ஒரு மணியளவில இவர் ஒரு மாதிரியாக, சோர்ந்துபோய் வந்தார்". "வீட்டுக்குள்ள வந்தவர்-'எங்கட காந்தரூபனும் கரும்புலியாப் போனவன்' என்று சொல்லிப் போட்டு அழுதார். நான் ஏங்கிப் போனன். என்னால தாங்கிக் கொள்ளேலாம இருந்தது... நானும் சேர்ந்து அழுதன்". யோகராசா அண்ணரும், மனைவியும் பிற்காலத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றார் கள். அவர்கள் தங்களுக்கு நான்கு குழந்தைகள் என்று சொல்கின்றார்கள். தங்களுடைய முதல் மகன் கோணேஸ்வரன் (காந்தரூபன்) என்கிறார்கள். அவர்களுடைய மூத்த மகன் கரும்புலியாகிக் கடலிலே காவியமாகியபின், அவர்களுடைய நான்காவது மகன் பிறந்தான். இப்போது கைக்குழந் தையான அவனைத் தூக்கித் தோளில சாய்த்தபடி அந்தத் தாய் சொல்கிறாள். . . "காந்தரூபனா நினைச்சுத்தான் இவனை நான் வளக்கிறன்". இந்தத் தாயுடன் கூடவே அவரது தமக்கையாரும் இருந்தார். அதே உணர்வு, சின்ன வயது முதல் காந்தரூபன் மீது அன்பு செலுத்திய இந்தப் பெரியம்மாவும் சேர்ந்து, கடந்த காலத்தை நினைவுகூர்ந்தார். "சின்ன வயதில காந்தரூபன் என்ர பிள்ளையளோட சேர்ந்துதான் விளையாடித் திரிவான். படிக்கிறதெண்டா அவனுக்குச் சரியான கள்ளம். என்ர மகள் அவனைக் கூட்டிக்கொண்டு வந்து இருத்தி, எழுதக் கற்றுக் கொடுப்பாள்.'அ' எழுதி, 'ஆ' எழுதி 'இ' எழுதும் போது, "இதென்ன கனக்க சுழிபோட வேண்டியிருக்கு... எழுதுப் படுகுதில்லை" எண்டு சொல்லிக் கொப்பியைத் தூக்கி எறிஞ்சுபோட்டு ஓடிவிடுவான். "அப்படிப் பட்டவன், பிறகு இயக்கத்துக்குப் போய் கொஞ்சக்காலத்தால திரும்பி வரேக்க பெரிய அறிவாளி யாக இருந்தான். பெரிய அரசியல் மேதைகளைப் போல எங்களுக்கெல்லாம் விளக்கம் தருவான். அந்தளவுக்கு அவனை இயக்கம் தான் வளர்த்து விட்டது". பெரியம்மா தொடர்ந்து சொன்னார் "கப்பலடிக்கிறதுக்குப் போறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னர் சரியான வெயிலுக்கை வீட்டுக்கு வந்தான். 'தலையிடியாக் கிடக்கு பனடோல் தாங்கோ' என்றான். குடுத்தன். வாங்கிக் குடிச்சான். 'நான் ஒரு முக்கியமான வேலையா வேற ஒரு இடத்துக்குப் போறன் பெரியம்மா' என்றான். வருத்தம் என்று சொல்லுறாயேடா தம்பி. . . தலைவரிட்ட சொல்லிப் போட்டு நில்லன். . இன் னொருதரம் போகலாம்தானே' எண்டு ஆலோசனை சொன்னேன். 'இல்லைப் பெரியம்மா. அந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத்தான் அவரிட்டைக் கேட்டனான் .... கட்டாயம் நான் தான் அந்த வேலைக்குப் போகோணும்......' என்றான். 'சரிதம்பி .... சுகமாய் போய் சுகமாய் திரும்பி வா' எண்டு நான் சொல்ல -அவன் திருப்பிச் சொன்னான்-'சுகமாய் போவன் பெரியம்மா... அதில பிரச்சினையில்ல ....ஆனா.....திரும்பி வாறதென்கிறது தான் ....சரிபாப்பம் ....எண்டான்.' அதற்கு மேல் பெரியம்மாவால் பேசமுடியவில்லை. மறுபக்கம் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டார்.